இங்கே இந்தப் பேரவையில் ஒரு குற்றச் சாட்டாகவோ அல்லது வேறு வகையிலோ இந்தப் பேரவையில் விவாதிக்கலாமா அல்லது விவாதத்திற்கு ஆதாரமாக எடுத்துவைக்கலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை இங்கே எழுப்ப விரும்புகிறேன்.''

எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னை பொதுவானதாக உள்ளது.

பேரவைத் தலைவர் பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. தம்மைப் பற்றிப் பேசுவதற்கு விடையளிக்கமுடியாத நிலையிலே அங்கு ஒருவரை இருத்திவிட்டு, அவரைப்பற்றி பேசுவது முறையாகாது. ஆகவே, பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவரைப் பற்றிப் பேசுவது முறையாகாது. அதனால்தான் பேரவைத்தலைவரைப் பற்றி பேசவே கூடாது என்று வரையறுத்துக் கூறிவிடாது பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் உணர வேண்டுவது, பிறர் தம்மைப்பற்றி பேசுவதற்கு விடையளிக்க வாய்ப்பு அளித்துவிட்டு பேசலாம் என்பதே.

பேரவைத் துணைத் தலைவருக்கு அவையில் பேசும் உரிமை இருப்பதால் பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது எனப் பேரவைத் தலைவருக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு பேரவைத் துணைத் தலைவருக்கு அளிக்கப்படவில்லை.

முன்னாள் பேரவைத் தலைவருக்கும், முன்னாள் பேரவைத் துணைத் தலைவருக்கும் விடையளிக்க முடியாத ஒரு கட்டுப்பாடு இல்லை. அவர்கள் எப்போது வேண்டுமாயினும், எங்கு வேண்டு மாயினும் விடையளிக்க உரிமை பெற்றவர். ஆகவே, அவர்களைப் பற்றிப் பேசவே கூடாது என்பது, உறுப்பினர் உரிமையைப் பறிப்பதாகும்.

(5) அரசினர் தீர்மானம் விதி 41-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியைத் தளர்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.